REGISTRAR OF NEWS PAPER FOR INDIA REGN. NO. 15261/2005 (R.DIS NO.1834/04)

5 PAGES பக்கம் 1

# CVPA NEWS

A Monthly Newspaper (Tamil & English) for Video & Photographic Professionals

AN OFFICIAL NEWS MAGAZINE FROM CHENNAI VIDEO & PHOTOGRAPHER'S ASSOCIATION

FILM - 22 JUNE 2025

CLICK - 03 ₹. 1

## அறிவிப்பு

60 வயதுக்கு உட்பட்டவர்கள் நமக்கு நாமே குடும்ப நல பாதுகாப்பு திட்டத்தில் இணைந்து குடும்ப பாதுகாப்பை உறுதி செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இப்படிக்கு

**P. துரைபாபு**

CVPA செயலாளர்

# சங்க அலுவலகம் மீண்டும் பழைய விலாசத்திற்கு மாற்றப்பட்டுள்ளது









CVPA உறுப்பினர்களுக்கு வணக்கம்!

நமது சங்க உறுப்பினர்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று, நமது சங்க அலுவலகம், எண்: 24/51. பங்காரு தெரு, எல்லீஸ் ரோடு, மவுண்ட் ரோடு, சென்னை-2. என்கிற பழைய விலாசத்திற்கு 18.06.2025 முதல் மீண்டும் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். புதுப்பொலிவுடன் மாற்றி அமைக்கப்பட்டுள்ள சங்க அலுவலகத்தை இந்நாள் மற்றும் முன்னாள் நிர்வாகிகள், சங்கத்தின் கௌரவ துணைத்தலைவர் யோகா அவர்கள் முன்னிலையில், தினா கலர்லேப் உரிமையாளர் தினகரன் அவர்கள் ரிப்பன் கட் செய்து குத்துவிளக்கு ஏற்றி துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் சங்க நிர்வாகிகள் மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள். இனி நம் சங்கப் பணிகள் அனைத்தும் நாம் மேலே குறிப்பிட்டுள்ள விலாசத்தில் நடைபெறும் என்பதை மீண்டும் நினைவு படுத்துகிறோம்.

நமது சங்க உறுப்பினர்களின் பிள்ளைகள் கல்லூரியில் சேர்ந்து படிக்கும் கனவை, டாக்டர் எம்ஜிஆர் பல்கலைக்கழகமும், ஏசிஎஸ் கல்லூரியும், நமது சங்க உறுப்பினர்களின் உணர்வுகளை புரிந்து கொண்டு, கடந்த சில ஆண்டுகளாக நமது பிள்ளைகளுக்கு மேற்படிப்பு படிக்க வசதி செய்து கொடுத்து வருகிறது. அந்த வகையில் இந்த வருடம் நான்கு பிள்ளைகளுக்கு கட்டணம் ஏதும் இன்றி படிக்க ஃப்ரீ சீட் வழங்கப்பட்டுள்ளது. இது தவிர 60% மற்றும் 50% சதவீத கட்டண அடிப்படையில் 3+3=6பிள்ளைகளுக்குசீட்வழங்கப்பட்டுள்ளது.இதுதவிரPGபடிக்கஒருஉறுப்பினரின் மகளுக்கு கட்டணம் இல்லாமல் சீட் கொடுக்கப்பட்டுள்ளது. ஆக மொத்தம் நமது சங்கத்திற்கு 11 சீட்டுகள் உயர்கல்வி படிப்பதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

சமீப காலமாக குறைந்த வயதுடைய நமது சங்க உறுப்பினர்கள் சிலர் மாரடைப்பின் காரணமாக மரணம் அடைந்து வருவது அதிர்ச்சி அளிப்பதாகவும் கவலை அளிப்பதாகவும் உள்ளது. சங்க உறுப்பினர்கள் தங்கள் உடல் நலனை பேணிக் காப்பதில் மிகுந்த கவனம் எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும், அவ்வப் போது மருத்துவ பரிசோதனை செய்து கொள்வது நல்லது என்றும் கூறுகின்றனர். நம்முடைய சக கலைஞன் பாதிக்கப்படும் போது, நமது சங்கத்தால் கட்டமைக்கப்பட்ட நண்பர்கள் மனித நேயத்துடன் செயல்பட்டு, பலரும் உதவி செய்கின்றனர். மிக குறுகிய காலத்தில் ஒரு பெரும் தொகையை பாதிக்கப்பட்ட நண்பருக்கு மருத்துவ உதவிக்கு பணம் கொடுக்கின்றனர். இது போன்ற உதவிகள் செய்யும் பரந்த மனப்பான்மை கொண்டவர்களை உண்மையில் பாராட்டுகிறோம். ஆனாலும், மறைந்த சக கலைஞனின் குழந்தைகளின் எதிர்காலம், குடும்ப பாதுகாப்பு ஆகியவற்றை மேம்படுத்த போதுமான அளவிற்கு பணம் கொடுக்க முடியவில்லை, என்றும் வருத்தப்படுகின்றனர்.

இந்த மாதத்தில் மட்டும், கிராப்ட் வீடியோ திரு.நடராஜன் அவர்கள், தாம்பரம் RK ஸ்டுடியோ திரு. கமலக்கண்ணன் அவர்கள், அயன்புரம் RK ஸ்டுடியோ திரு.ராஜ்குமார் அவர்கள், மயிலாப்பூர் ராஜாராமன் அவர்கள், ஆகிய நான்கு சங்க உறுப்பினர்கள் நம்மை விட்டு பிரிந்து சென்றுள்ளனர். இவர்களில் திரு.கமலக்கண்ணன் மற்றும் திரு. ராஜா ராமன் என்கிற பாண்டி ஆகிய இருவரும் நமக்கு நாமே திட்டத்தின் CVPA NNT உறுப்பினர்களாக இருந்துள்ளனர். இவர்களுக்கு CVPA NNT நிதியில் இருந்து விரைவில் பணம் வழங்கப்பட உள்ளது. இந்த இருவருக்குமான ஈமச்சடங்கு தொகை தலா 20,000 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டு விட்டது. திரு. நடராஜன் மற்றும் திரு. ராஜ்குமார் ஆகியோர் CVPA NNT உறுப்பினர்களாக இல்லாத காரணத்தால் இவர்களுக்கு நமது பொதுக்குழு தீர்மானப்படி வழங்கப்படும், ஈமச்சடங்கு தொகை தலா 20,000 ரூபாய் மட்டும் வழங்கப்படுகிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

நமது சங்கத்தின் வேண்டுகோளை ஏற்று சோனி நிறுவனம் இதுவரை இரண்டு பயிற்சி வகுப்புகளை நடத்தி இருக்கிறது. இது FX30 கேமரா வாங்கியவர்களுக்கும், வாங்க இருப்பவர்களுக்கும், பயன்பெறும் வகையில் இருந்தது. திருமண ஒளிப்பதிவாளர்களை, சினிமா ஒளிப்பதிவாளர்களுக்கு இணையாக தொழில் நுட்ப ரீதியாக மாற்றும் முயற்சியில் சோனி நிறுவனமும், கேனான் நிறுவனமும் மிகப்பெரிய வெற்றியை அடைந்துள்ளது. இந்த காலகட்டத்தில் நமது சங்க உறுப்பினர்களுக்கு சினிமாடிக் போட்டோகிராபி- வீடியோகிராபி குறித்து விவரிக்க இது போன்ற பயிற்சி வகுப்புகள் நடத்துவது மிகவும் அவசியமாகிறது.

10.06.2025 அன்று வடசென்னை தண்டையார்பேட்டை பகுதி ஸ்ரீ சாய் மகாலிலும்,11.06.2025 அன்று தென் சென்னை- எஸ்2, குரோம்பேட்டை பகுதி ஜெய் பேலஸ் ஆகிய இரண்டு இடங்களிலும் சோனி நிறுவனம் FX30-க்கு பயிற்சி வகுப்பை நடத்தியது. சோனி திரு.கிஷோர் அவர்கள், திரு.சதீஷ் அவர்கள், திரு.முஸ்தபா ஆகியோர் முன்னிலையில் இந்த பயிற்சி வகுப்புகள் நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து 17.06.2025 அன்று தென் சென்னை-எஸ்2, நங்கநல்லூர் பகுதி, ஸ்ரீசாய்ராம் மஹாலில், கேனான் நிறுவனம் சார்பில் R5 மார்க்2விற்கான பயிற்சி வகுப்பு மதுரை தனபால் அவர்கள் நடத்தினார்கள். 24.06.25 அன்று தண்டையார்பேட்டை வாணி மகாலில் EDIUS பயிற்சி வகுப்பு நடைபெற்றது. இந்த நான்கு பயிற்சி வகுப்புகளிலும் நிறைய சங்க உறுப்பினர்கள் கலந்துகொண்டு பயன் பெற்றார்கள். வடசென்னை பகுதி உறுப்பினர்களின் வேண்டுகோளை ஏற்று, வடசென்னை துணைத்தலைவர், இணைச் செயலாளர் மற்றும் பகுதி செயலாளர்கள், விளம்பரதாரர்களுடன் இணைந்து பாவை பாலு அவர்களின் ஈடியெஸ் வீடியோ எடிட்டிங் பயிற்சி வகுப்பு ஏற்பாடு செய்யப்பட்டது. விரைவில் மேலும் சில பயிற்சி வகுப்புகள் நடத்த திட்டமிட்டு வருகிறோம்.

நமது சங்க உறுப்பினர்கள் தங்களுடைய அடையாள அட்டையை இடைவெளி இன்றி ரினிவல் செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம். அதேசமயம் நமது சங்கத்தின் ஒரு அங்கமாக விளங்கும் நமக்கு நாமே (CVPA NNT) திட்டத்தில் இணைந்து நமது குடும்ப நல பாதுகாப்பை உறுதி செய்வதை அவசியமானதாக எடுத்துக் கொள்ளுங்கள். நமக்கு நாமே (CVPA NNT) திட்டத்தில் ஆயிரம் உறுப்பினர்களை இணைப்பது என்பது நமது இலக்காகும். இதுவரை நமக்கு நாமே (CVPA NNT) திட்டத்தில் 667 உறுப்பினர்களின் குடும்பங்கள் பாதுகாக்கப்பட்டுள்ளன. மேலும் பாதிக்கப்பட்ட மூன்று குடும்பங்களில் ஒரு குடும்பத்திற்கு (CVPA NNT) நிதியில் இருந்து பணம் அளித்திருக்கிறோம். மேலும் இரண்டு குடும்பங்களுக்கு விரைவில் பணம் வழங்க இருக்கிறோம். சங்க உறுப்பினர்கள் தங்கள் அடையாள அட்டையை ரெனிவல் செய்யும்போது, நமக்கு நாமே திட்டத்திலும் உறுப்பினராக சேருமாறு உங்கள் அனைவரையும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

வரும் ஆகஸ்ட் மாதம் முதல் வாரம் அல்லது இரண்டாம் வாரத்தில் நமது சங்கத்தின் பொதுக்குழு கூட்டம் நடைபெற உள்ளது. ரெனிவலில் உள்ள எல்லா உறுப்பினர்களுக்கும் பொதுக்குழு அழைப்பிதழ் தபாலில் அனுப்பி வைக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

இப்படிக்கு

P. துரைபாபு, CVPA செயலாளர்







வடசென்னை தண்டையார் பேட்டை பகுதியில் நடைபெற்ற சோனி பயிற்சி வகுப்பில் கலந்து கொண்ட CVPA உறுப்பினர்கள்



தென் சென்னை- எஸ்2, குரோம்பேட்டை பகுதியில், நடைபெற்ற சோனி பயிற்சி வகுப்பில் கலந்து கொண்ட CVPA உறுப்பினர்கள்.




தென் சென்னை -எஸ்-2 மடிப்பாக்கம் பகுதியில் உள்ள ஸ்ரீ சாய்ராம் மஹாலில் நடைபெற்ற
கெனான் ஆர்-5 மார்க் 2 பயிற்சி வகுப்பில் கலந்து கொண்ட CVPA உறுப்பினர்கள்










## வட சென்னையில் ஈடியெஸ் வீடியோ எடிட்டிங் பயிற்சி வகுப்பு

வடசென்னை பகுதி CVPA உறுப்பினர்களுக்காக, அவர்களின் நீண்ட நாள் கோரிக்கையான, வடசென்னை பகுதி உறுப்பினர்களின் வேண்டுகோளுக்கிணங்க வடசென்னை துணைத்தலைவர் மற்றும் இணைச் செயலாளர் மற்றும் பகுதி செயலாளர்கள் ஏற்பாட்டின்படி, இன்றைய காலகட்டத்திற்கு மிகவும் அவசியமான ஈடியெஸ் பயிற்சி வகுப்பு பாவை பாலு அவர்களால் நடத்தப்பட்டது. பேசிக் மற்றும் அட்வான்ஸ் ஆகிய இரண்டு பிரிவுகளில் வீடியோ எடிட்டிங் செய்ய பயிற்சி வழங்கப்பட்டது. 170க்கும் மேற்பட்ட கலைஞர்கள் இப்பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டு பயன் பெற்றார்கள். முழுக்க முழுக்க விளம்பரதாரர்களின் ஆதரவுடன் நடைபெற்ற இப் பயிற்சி வகுப்பு கட்டணம் ஏதும் இன்றி நடத்தப்பட்டது. பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டவர்களுக்கு சைவம் மற்றும் அசைவ உணவு பரிமாறப்பட்டது. பத்துக்கும் மேற்பட்ட மகளிர் உறுப்பினர்கள் இப்பயிற்சி வகுப்பில் ஆர்வத்துடன் வந்து கலந்து கொண்டார்கள். அவர்களை மேலும் ஊக்குவிக்கும் வகையில் பாராட்டி கௌரவிக்கப்பட்டார்கள். நிகழ்ச்சியில் முடிவில் வடசென்னை பகுதி CVPA சார்பில் பயிற்றுநர் பாவை பாலு அவர்களுக்கு நினைவுப் பரிசு வழங்கப்பட்டது.









வடசென்னை, வண்ணாரப்பேட்டை பகுதியை சேர்ந்த, விழி போட்டோகிராபி உரிமையாளர், திரு. B.பாபு – G.ரமாதேவி ஆகியோரின் திருமண வரவேற்பில் CVPA நிர்வாக குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்திய தருணம்



மத்திய சென்னை, பட்டாளம் பகுதியை சேர்ந்த, நமது சங்க உறுப்பினர் அப்துல் வீடியோ, திரு. அப்துல் முத்தலிப் அவர்களுடைய மகன் நிஜாமுதீனின் முதலாவது பிறந்தநாள் விழா கொண்டாட்டத்தில் CVPA நிர்வாக குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டு CVPA சார்பாக குழந்தையை வாழ்த்தினார்கள்

# CVPA உறுப்பினர்களின் பிள்ளைகளுக்கு கட்டணம் இன்றியும், கட்டணத்தில் சலுகையுடன் கூடிய உயர் கல்வி படிக்க வசதி செய்து கொடுத்த திரு. ACS அருண்குமார் அவர்களுக்கு நன்றி! நன்றி!! நன்றி!!!














2019 முதல் 2025 வரை ஏழு ஆண்டுகளாக Dr. MGR EDUCATIONAL RESEARCH INSTITUTE பல்கலைக்கழகத்தின் தலைவர் திரு. ACS அருண்குமார் அவர்கள் . கட்டணமில்லா உயர்கல்வியை நமக்கு தொடர்ந்து வழங்கி வருகின்றார்கள். இதுவரை சுமார் தமிழ்நாடு முழுவதும் 180 மாணவர்கள் பயனாளிகளாக இருக்கின்றனர். இந்த தருணத்தில், பல்கலைக்கழக தலைவர் திரு. ACS அருண்குமார் அவர்களுக்கும், பல்கலைக்கழக நிர்வாகத்திற்கும், அங்கே புகைப்பட கலைஞராக பணிபுரியும் திரு. பாலச்சந்தர் அவர்களுக்கும், அனைத்து புகைப்பட கலை சொந்தங்கள் சார்பாக இதயபூர்வமான நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். இந்த ஆண்டு நம் சங்கத்தின் உறுப்பினர் பிள்ளைகளுக்கு மக்கள் தொடர்பாளர் திரு.பாலச்சந்தர் அவர்கள் ஆற்றிய பணி சிறப்பானது. காலையில் இருந்து மாலை நேரம் வரை தொடர்ந்து 10 நாட்களாக நமது உறுப்பினர்களின் பிள்ளைகளுக்கு கல்வி சேர்க்கையின் போது நல்ல வழிகாட்டியாகவும் அவர்களுக்கு உதவி புரிந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. கட்டணமில்லா உயர்கல்வி திட்டத்தில் 4 பேர் பயனாளிகளாகவும் 60% சதவீதம் மற்றும் 40% சதவீதம் சலுகை மூலம் 3+3 ஆறு நபர்களும், 1 நபருக்கு 50% சதவிகிதம் சலுகையில் முதுகலை பட்டப்படிப்பு பெற்று தரப்பட்டது.




இந்த தருணத்தில் மாணவர்களுக்கு நாம் கேட்கும் நேரத்தில் எல்லாம் உடனடியாக இ மெயில் மூலம் கடிதம் வழங்கிய மாநில சங்க தலைவர் அவர்களுக்கும், (TVPA) மாநில ச ங்க நிர்வாகிகளுக்கும்,நாம் நன்றியை தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டு இருக்கின்றோம். மேலும் இந்த மாணவர் சேர்க்கையின் போது நமது சென்னை மாவட்ட சங்க நிர்வாகிகள் அனைவரும் உடனிருந்து முழு ஒத்துழைப்பு அளித்தனர்.









# சென்னையில் சர்வதேச புகைப்பட கண்காட்சி!



சென்னையில்,போட்டோகிராபி சொசைட்டி ஆப் மெட்ராஸ் அமைப்பின் சார்பில் சர்வதேச அளவிலான புகைப்படக் கண்காட்சி கடந்த மாதம் நடைபெற்றது.

இந்த கண்காட்சியில் உலகம் முழுவதும் உள்ள சிறந்த புகைப்படக்கலைஞர்கள் எடுத்த படங்கள் காட்சிப்படுத்தப்பட்டன.

1857 ஆம் ஆண்டு சென்னையில் நிறுவப்பட்ட உலகின் இரண்டாவது பழமையான புகைப்படக் கழகமான 'போட்டோகிராபி சொசைட்டி ஆப் மெட்ராஸ்' அமைப்பில் மருத்துவர்கள், பொறியாளர்கள், பேராசிரியர்கள், கணக்காய்வாளர்கள், வங்கியாளர்கள், திரைத்துறையினர், ஊடகத்துறையினர் என்று பல்வேறு துறையைச் சேர்ந்தவர்கள் உள்ளனர்.

500க்கும் மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட இந்த அமைப்பின் உறுப்பினர்கள் எடுத்த சிறந்த புகைப்படங்கள் இந்த கண்காட்சியில் பார்வைக்கு வைக்கப்பட்டன. மேலும் அமைப்பின் சார்பில் ஒரு தேசிய மற்றும் இரண்டு சர்வதேச புகைப்படப் போட்டிகள் சமீபத்தில் நடத்தப்பட்டது.சர்வ தேச போட்டியில் கலந்து கொண்ட அமெரிக்கா,இங்கிலாந்து. ஆஸ்திரேலியா,பிரான்ஸ்,ஐக்கிய அரபு எமிரேட்ஸ்,ஜெர்மனி,ஹாங்காங்,தாய்லாந்து உள்ளீட்ட 40 நாடுகளைச் சேர்ந்த புகைப்படக் கலைஞர்கள் கலந்து கொண்டனர்.போட்டியில் வெற்றி பெற்றவர்களின் படங்களும் காட்சிக்கு வைக்கப்பட்டன.

ஒப்பன் கலர், மோனோக்ரோம், லாண்ட்ஸ்கேப், சின்னங்கள் , வனவிலங்கு, ஸ்ட்ரீட் போட்டோகிராபி மற்றும் போர்ட்ரெய்ட் ஆகிய தலைப்பில் 80ற்கும் மேற்பட்ட உறுப்பினர்களின் 225 படங்கள் தேசிய மற்றும் சர்வதேச அளவில் வெற்றி பெற்ற படங்கள் என மொத்தம் 340 புகைப்படங்களைக் கொண்டு கண்காட்சி பிரம்மாண்டமாக அமைந்திருந்தது.

சென்னை கிரீம்ஸ் ரோட்டில் உள்ள லலித்கலா அகாடமியில் ஜுன் 1 ஆம் தேதி துவங்கி 7 ஆம் தேதி வரை நடைபெற்றது. புகைப்படக் கண்காட்சியைக் காண அனைவரும் கட்டணம் ஏதும் இன்றி அனுமதிக்கப்பட்டனர். அனைவருக்கும்புகைப்பட விருந்தாக அமைந்த இந்த கண்காட்சியை புகைப்பட ஆர்வலர்கள், பொதுமக்கள் என எல்லோரும் மகிழ்ச்சியுடன் இந்த கண்காட்சியை கண்டுகளித்தனர்,அதிலும் இந்த படங்கள் யாவும் பாடங்கள் என்பதால் 'விஸ்காம்' படிக்கும் மாணவர்கள் ஒவ்வொருவரும் புகைப்படங்களை பார்த்து ரசித்து மகிழ்ந்தனர்.

**உங்கள் குடும்ப நல பாதுகாப்பை உறுதிபடுத்திக் கொள்ள, நமக்கு நாமே திட்டத்தில் இன்றே உறுப்பினராக இணையுங்கள்.**

- CVPA NNT

## வருந்துகிறோம்



தென் சென்னை S2, கிழக்கு தாம்பரம் பகுதியை சேர்ந்த, CVPAவின் ஆயுட்கால மூத்த உறுப்பினரும், CVPA NNT உறுப்பினருமான, திரு. D. கமலக்கண்ணன் அவர்கள் உடல்நலம் குன்றி,மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பலனின்றி இயற்கை எய்தினார். அன்னாரது மறைவிற்கு நமது சங்க நிர்வாகிகளும், பகுதி செயலாளர்களும், CVPA உறுப்பினர்களும், CVPA சார்பாக இறுதி அஞ்சலி செலுத்தியதுடன், அன்னாரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொண்டனர்.மேலும் நமது சங்க பொதுக்குழு தீர்மானப்படி மறைந்த உறுப்பினர்களுக்கு வழங்கப்படும், ஈமச்சடங்கு தொகை 20,000 ரூபாயை அவரது குடும்ப வாரிசுதாரர்களிடம் சங்க நிர்வாகிகள் வழங்கினார்கள். மறைந்த திரு. கமலக்கண்ணன் அவர்கள் CVPA NNT குழுவில் உறுப்பினராகவும் இருந்தார். எனவே CVPA NNT நிதியில் இருந்து அவரது குடும்பத்திற்கு விரைவில் ரூ.1,13,400 தொகையும் வழங்கப்பட உள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். திரு. கமலக்கண்ணன் அவர்கள் நமது சங்கத்தில் 2000 ஆவது ஆண்டு, தென் சென்னைக்காக அப்போதைய முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட 5 செயற்குழு உறுப்பினர்களில் ஒருவராக இருந்தார். 2006-2010 வரை கிழக்கு தாம்பரம் பகுதி செயலாளராகவும் இருந்துள்ளார்.

## வருந்துகிறோம்



நமது CVPA சங்கத்தின் மூத்த ஆயுட்கால உறுப்பினர், CVPA-ன் ஆரம்ப கால ஆலோசனைக் குழு உறுப்பினர், நமது சங்க தேர்தல் குழுவில் ஒரு அதிகாரியாக இருந்து செயல்பட்டவருமான **திரு.கிராப்ட் வீடியோ நடராஜன்** அவர்கள் கடந்த ஏப்ரல் மாதம் 24 ஆம் தேதி இயற்கை எய்தினார் என்கிற தகவல் சங்க அலுவலகத்திற்கு மிகவும் தாமதமாக வந்து சேர்ந்தது. அவரை பிரிந்து வாடும் குடும்பத்திற்கு நமது சங்கம் சார்பாக ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறோம். நமது சங்க பொதுக்குழு தீர்மானப்படி, உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் ஈமச்சடங்கு தொகை 20,000 ஆயிரம் ரூபாய் அவருடைய குடும்ப வாரிசு தாரர்களிடம் விரைவில் கொண்டு போய் சேர்க்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.



மத்திய சென்னை, அயனாவரம் பகுதியைச் சேர்ந்த, RK ஸ்டுடியோ, திரு.K.ராஜ்குமார் அவர்கள் மாரடைப்பால் மரணம் அடைந்தார். அன்னாரது இறுதி அஞ்சலி நிகழ்ச்சியில் நமது சங்க நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள், நமது சங்க உறுப்பினர்களும் CVPA சார்பாக கலந்து கொண்டு அன்னாரது மறைவிற்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொண்டனர். நமது பொதுக்குழு தீர்மானபடி மறைந்த உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் ஈமச் சடங்கு தொகை 20,000 ரூபாய் அன்னாரது வாரிசுதாரர்களிடம் சங்க நிர்வாகிகள் வழங்கினார்கள்.



தென் சென்னை மயிலாப்பூர் பகுதியை சேர்ந்த நமது சங்க உறுப்பினர் திரு. ராஜா ராமன் என்கிற பாண்டி அவர்கள் மாரடைப்பால் மரணம் அடைந்தார். அன்னாரது இறுதி அஞ்சலி நிகழ்ச்சியில் நமது சங்கம் சார்பாக சங்க நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொண்டனர். மேலும்,நமது சங்க பொதுக்குழு தீர்மானப்படி மறைந்த சங்க உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் ஈமச்சடங்கு தொகை 20,000 ரூபாய் அவருடைய வாரிசுதாரர்களிடம் சங்க நிர்வாகிகள் வழங்கினார்கள். மேலும் இவர் நமக்கு நாமே (CVPA NNT) திட்டத்திலும் உறுப்பினராக உள்ளார். எனவே CVPA NNT நிதியில் இருந்து இவரது குடும்பத்திற்கு 1,13,400 ரூபாய் விரைவில் வழங்கப்பட உள்ளது.

**CVPA NEWS** (Tamil & English ) Monthly Newspaper, **RNI No. TNBIL / 2005 / 15261 (R.Dis no.1834/04)**
Published by **B.SRIDAR,** on behalf of
**Chennai Video & Photographers' Association,**
at 51/24, Bangaru Street, Ellis Road, Chennai-2. Ph: 2860 7821 Email : cvpanews2005@gmail.com, Website : www.cvpa.in
Printed by **M.NAVANEETHAN,** at **Nava Jothi Achagam,** No.8. Mukhtharunnissa Begum St, Ellis road, Chennai-2.
Editor : **B.SRIDAR,** Mobile: 8015170351